**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 50 | of | 2014 |

**2026-ம் ஆண்டு ஜுலை திங்கள் 13-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் பி.வா.சா.2 -வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **பத்மலோஷன்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-13.07.2026**

**பி.வா.சா.-2**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் வாதி நிறுவனத்தில் 2007 ம்ஆண்டு பணியில் சேர்ந்தேன். பணியில் சேரும் போது executive accounts ஆக இருந்தேன். வேலையில் இருந்து வரும் போது senior executive accounts ஆக இருந்தேன். நான் mahendira world city ல் வேலை பார்த்தேன். எனக்கு reporting officer இருவர் இருந்தார்கள். ஒருவர் plant ல் இருப்பவர் இன்னொருவர் head office ல் இருப்பவர். Trainees க்கு stiphend, leave encashement, bonus ஆகியவை வழங்குவது எனக்கு பணிக்கப்பட்ட வேலை என்றால் அப்படி எதுவும் இல்லை. Appointment order ல் இவ்வாறு சொல்லப்படவில்லை. ஆனால் இந்த

வேலைகளை செய்திருக்கிறேன். நான் காசோலை மூலம் வங்கியில் இருந்து தொகை பெற் று வந்து trainees க்கு கொடுப்பேன். என்னைப் போலவே 1ம் பிரதிவாதியும் இதே பணியை பார்த்தார். Trainees ஐ நேரடியாக பார்த்து அவர்களுடைய ID card, salary ரசீது ஆகியவற்றை பார்த்துதான் பணப்பட்டுவாடா செய்வேன். வா.சா.ஆ.16 நான் கொடுத்த பட்டியல்தான். Trainees வராதவர்களுக்கான unpaid amount reconcile செய்யப்படவில்லை என்பதுதான் நான் தான் mistake என்று வா.சா-ஆ.16 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 என்னை வற்புறுத்தி வாதியினால் பெறப்பட்ட ஆவணமாகும். வற்புறுத்தி பெற்றப்பட்ட ஆவணம் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. unpaid wages என்ற account ல் பணம் மாத இறுதியில் திரும்ப செலுத்தப்பட்டு head office க்கு சென்றுவிடும். 1ம்பிரதிவாதி முதல் 3 ஆண்டுகள் Trainees க்கு amount disbursing செய்து வந்தார். ஆனால் அவரை depute செய்ய வாதி நிறுவனம் உத்தரவு எதுவும் வழங்கவில்லை. 90 சதவீதம் நானே amount disbursing செய்துவிடுவேன். மீதி 10 சதவீதம் மட்டுமே 1ம்பிரதிவாதியிடம் செய்ய சொல்லுவேன். நான் இவ்வாறு சொல்லுவது பொய் என்றால் அதை மறுக்கிறேன். Internal audit சமயம் 1ம்பிரதிவாதி மேசையில் இருந்து சுமார் ரூ.13 லட்சம் எடுக்கப்பட்டது என்றால் கம்பெனியில் அழைத்து சொன்னார்கள். அதற்கு முன்பே நான் வேலையை resign செய்துவிட்டேன். No dues certificate வழங்கப்பட்டாலும் என்னுடைய resignation accept செய்யப்பட்டாலும் நான் பணி புரிந்த காலத்தில் நடந்த

முறைகேடுகளுக்கு பதில் சொல்ல வேண்டும் என்றால் சரியல்ல. நானும் 1ம்பிரதிவாதியும் சேர்ந்துதான் பொய்யான நபர்களை trainees ஆக காட்டி பணம் மோசடி செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. நான் நேரடியாக பார்த்து trainees க்கு பணம் வழங்கியதாக சொல்வது பொய் என்றால் அதை மறுக்கிறேன். கம்பெனிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு நாங்கள் பிரதிவாதிகள் இருவரும் ஈடு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வாதி நிறுவனம்எங்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்து பதிவு செய்யப்பட்ட வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது.

மறுவிசாரணை -இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu